بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

**இடம் : பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல் – இலண்டன்.**

August 02 2013

**தமிழாக்கம் : மவ்லவி N. ஷியாவுல் ஹக் சாஹிப்**

# தீய செயல்களின் பக்கம் நெருங்காதீர்கள்!

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

கடந்த குத்பாவில் நான் அதிகாரம் அல்அன்ஆம்-ன் 152, 153 வசனத்தில் கூறப்பட்டுள்ள கட்டளைகளைப் பற்றி எடுத்துரைத்து வந்தேன். அதில் மூன்று கட்டளைகள், அதாவது இணை வைப்பதிலிருந்து தவிர்ந்திருப்பது, பெற்றோர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது, பெற்றோர்களுக்கு, பிள்ளைகளின் தர்பிய்யத்திற்கான முக்கியத்துவம் பற்றி கூறப்பட்டிருந்தது. அந்த வசனத்திலுள்ள மீதியுள்ள கட்டளைகள், அதாவது எதனைக் குறித்து அல்லாஹ் مَا حَرَّمَ رَبُّكُمْ عَلَيْكُمْ அதாவது உங்களது இறைவன் உங்களுக்கு தடுத்தவற்றைப் பற்றிய கட்டளைகளைக் குறித்து சிலவற்றை இன்று எடுத்துரைப்பேன். இந்த வசனங்களில் கூறப்பட்டுள்ள கட்டளைகள் ஒருவேளை இன்றும் முடிவடையாது.

நான்காவதாக கூறப்பட்ட கட்டளை இதுவாகும். وَلَا تَقْرَبُوا الْفَوَاحِشَ مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ அதாவது, வெட்கக்கேட்டிற்கு அருகில் கூட செல்லாதீர்கள். வெளிப்படையாக இருக்கக்கூடிய தீமையாக, வெட்கங் கெட்டதாக இருப்பினும், மறைமுகமான வெட்கங்கெட்டதாக இருப்பினும் அவற்றின் பக்கம் நெருங்காதீர்கள்.

இந்தவொரு கட்டளையில் பல்வேறு விதமான வெட்கக்கேடுகளில் இருந்தும், தீமைகளிலிருந்தும் தடுக்கப்பட்டுள்ளது. الْفَوَاحِشَ என்பதற்கு பல அர்த்தங்கள் உள்ளன. இதற்கு விபச்சாரம் என்றும் பொருள் உள்ளது. இதற்கு வரம்பு மீறுவது என்ற பொருளும் உள்ளது. இதற்கு ஒழுக்கங்கெட்ட, நல்லொழுக்கத்தைச் சீரழிக்கக்கூடிய செயல் என்ற பொருளும் உள்ளது. இதற்கு பல்வேறு விதமான மிகப்பெரிய பாவங்கள் மற்றும் சய்த்தானிய செயல்கள் என்ற பொருளும் உள்ளது.

எனவே, இந்த கட்டளையில் தனிப்பட்ட மற்றும் சமூகத் தீமைகள் ஒழிக்கப்பட்டுள்ளன. அல்லது வீடு, சுற்றுச்சூழல் மற்றும் சமூகத்தில் பரவக்கூடிய வெட்கக்கேடுகள் ஆகியவை தடுக்கப்பட்டுள்ளன.

இதில் விபரச்சாரம் என்பதைப் பற்றி பார்த்தோம் என்றால், இது எப்படிப்பட்ட பாவச்செயல் என்றால் திருக்குர்ஆனில் மற்றோரிடத்தில் இதற்கு தண்டனை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இது எப்படிப்பட்ட பாவம் மற்றும் வெட்கங்கெட்ட செயல் என்றால் இதில் திருமணமான ஆண் இந்தப் பாவத்தைச் செய்தால், அவர் தனது மனைவி மக்களுக்குரிய உரிமைகளை மறந்து விடுகின்றனர். இந்த வெட்கங்கெட்ட செயலில் ஈடுபடுவதால் அவர் தனக்கு தனது மனைவி மக்கள் மீது என்ன பொறுப்பு உள்ளது என்பதையே மறந்து விடுகின்றார். அதுவே ஒரு திருமணமான பெண்ணாக இருந்தால் அவள் தனது பிள்ளைகள் மற்றும் தனது கணவருக்குரிய உரிமைகள் மற்றும் தனது பொறுப்புகளைச் செய்யாமல் மறந்து விடுகின்றாள். அதுவே திருமணம் ஆகாதவராக இருந்தால் சமூகத்தில் அசுத்தத்தைப் பரப்புகிறார். பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்து சிலர் தகாத உறவு கொள்கின்றனர். வீடு மற்றும் குடும்பத்தின் அழுத்தம் அல்லது சமூகத்தின் அழுத்தம் காரணமாக அல்லது தனது பொய்யான வாக்குறுதியினால் அந்த தொடர்பு இடையில் முறிந்து போனால் ஆண்களுக்கு பெரிய அளவில் எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. ஏனென்றால் Asian சூழலைக் கொண்ட நமது சமூகம் ஆண்களுடைய தீமைகளை அதிக அளவு மறைக்கின்றது. ஆனால் பெண்ணுடைய வாழ்வு சீரழிந்து போய் விடுகின்றது.

இதற்கான உதாரணம் பத்திரிகைகளில் பொதுவாக வெளி வருகின்றது. மேலும் இப்படிப்பட்ட தொடர்பின் காரணமாக குழந்தை பிறந்தால், அப்படிப்பட்ட நபர்கள் குழந்தைக்கு அதற்குரிய உரிமையைக் கொடுக்காமல் குழந்தையைக் கொலை செய்யக் காரணமாகின்றனர். அல்லது அப்படிப்பட்ட பிள்ளைகள், பிள்ளைகளைக் கொல்லுதல் என்ற பிரிவின் கீழ் வருகின்றனர். இங்கு இந்த நாடுகளில் இவ்வாறு தெரிய வந்தால் பிறகு ஏதாவது கொஞ்சம் உரிமையைப் பெற்றுத் தருவதற்கு சட்டம் முயற்சி செய்கின்றது. மேலும் சிறிது உரிமையைப் பெற்றும் தருகின்றது. ஆனால் பலரும் பொதுவாக பிள்ளைகளைக் கொலையே செய்து விடுகின்றனர். மேலும் ஏழை நாடுகளில் பிள்ளைகளுக்கு எந்தவித உரிமையும் கிடையாது. இந்த வெட்கங்கெட்ட செயல் மற்றும் தீமைகளில் ஏதாவது பண வசதி படைத்த மனிதர் தொடர்பு கொண்டிருந்தால், சட்டம் அவரிடம் எதுவும் கேட்பதில்லை.

இரண்டு நாட்களுக்கு முன்பு பாகிஸ்தான் தொடர்பாக பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. அதாவது ஓரிடத்தில் தவறான வழியில் ஒரு குழந்தை பிறந்தது. காவல்துறை நேர்மாறாக அந்த ஏழைப் பெண் மீது வழக்கு பதிவு செய்துள்ளது. அந்த ஆணை எதுவும் செய்யவில்லை. ஏனென்றால் அவர் வசதி படைத்தவராக இருந்தார். இவைகள் வெளியில் வந்திருக்கக்கூடிய ஒன்றிரண்டு சம்பவங்கள் ஆகும். இதுபோன்ற எத்தனை சம்பவங்கள் உள்ளன என்பது தெரியவில்லை. அவை பல குடும்பங்களை சீரழித்துள்ளது. இது இறைவனுடைய கட்டளையிலிருந்து விலகி இருப்பதனாலேயே ஆகும். முஸ்லிம் என்று கூறக்கூடியவர்களின் இஸ்லாமிய சட்டங்களைப் பின்பற்றுகிறோம் என்ற முழக்கங்களை எழுப்பக் கூடியவர்களின் நாட்டின் நிலைமை இவ்வாறு உள்ளது என்றால், நாம் மற்றவர்களுக்கு என்ன போதிக்க முடியும்? இதுபோன்ற வெட்கங்கெட்ட செயல்கள் நடைபெறுகின்றன.

அல்லாஹ் இதுபோன்ற தீமைகளின் அருகில் கூட செல்லாதீர்கள் என்று கூறுகின்றான். அதாவது தீமைகளின் பக்கம் திசை திருப்பக்கூடிய அனைத்து விசயங்களிலிருந்தும் தவிர்ந்திருங்கள்.

இக்காலக்கட்டத்தில் இதற்கு பல்வேறு வழிகள் திறந்துள்ளன. இக்காலத்தில் இன்டர்நெட்டில் ஆபாசமான படங்கள் வருகின்றன. வெட்கக்கேடுகள் உள்ளன. டி.வி. –யில் ஆபாசமான படங்கள் வருகின்றன. ஆபாசமான பத்திரிகைகள் அதாவது போனோகிராபி என்று கூறக்கூடியவற்றிற்கு எதிராக இங்கும் குரல்கள் எழுப்பப்படுகின்றது. அதாவது இப்படிப்பட்ட பத்திரிகைகளை ஸ்டால்களில், கடைகளில் வெளிப்படையாக வைக்கக் கூடாது. ஏனென்றால் பிள்ளைகளின் ஒழுக்கத்தில் தீய தாக்கம் ஏற்படுகின்றது என கூறப்படுகின்றது. இவர்களுக்கு இன்று தான் இந்த சிந்தனை வந்துள்ளது. ஆனால் திருக்குர்ஆன் 1400 வருடங்களுக்கு முன்பே கட்டளையிட்டுள்ளது. அதாவது இவைகள் அனைத்தும் வெட்கங் கெட்டதாகும். இதன் அருகில் கூட செல்லாதீர்கள் எனக் கூறுகின்றது. இது உங்களை வெட்கங்கெட்டவராக்கி விடும். இறைவனிடமிருந்து உங்களை விலக்கி விடும். மார்க்கத்திலிருந்து உங்களை விலக்கி விடும். மேலும் சட்டத்தை மீறக்கூடியவராக்கி விடும்.

இஸ்லாம், வெளிப்படையான வெட்கக்கேடுகளிலிருந்து மட்டும் தடுக்கவில்லை. மாறாக மறைவான வெட்கக்கேடுகளிலிருந்தும் தடுக்கின்றது. பர்தாவைப் பற்றிய கட்டளையும் இதனாலேயே இடப்பட்டதாகும். பர்தா மற்றும் ஒழுக்கமான ஆடைகள் மூலம் ஒரு பையன் மற்றும் பெண் பிள்ளைகளுக்கிடையில் ஏற்படக்கூடிய ஒரு திறந்த தொடர்பு மற்றும் சுதந்திரத்தில் ஒரு தடை ஏற்படுகின்றது. இஸ்லாம், பைபிளைப் போன்று நீங்கள் பெண்களை தீய பார்வையில் பார்க்காதீர்கள் என்று கூறவில்லை. ஏனெனில் பார்வைகள் படும் போது நெருக்கமும் ஏற்படும். பிறகு தீமைகள் உண்டாகும். பிறகு அங்கு நல்லது கெட்டது என்ற வேறுபாடு இல்லாமல் போய் விடும். பிறகு பொது இடங்களில் சேர்ந்து பழகுவதன் மூலம் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்களது கூற்றிற்கேற்ப இவ்வாறு சுதந்திரமான பையனும், பெண் பிள்ளையும் இருக்கும் போது ஆணும், பெண்ணும் இருக்கும் போது பிறகு மூன்றாவதாக உங்களிடத்தில் சய்த்தான் இருப்பான். நான் இன்டர்நெட் போன்வற்றின் உதாரணத்தைக் கூறினேன். இதில் Facebook, Skype போன்றவற்றின் மூலம் Chatting செய்யப்படுகிறது. இதனால் பல வீடுகள் அழிந்து போவதை நான் பார்த்துள்ளேன். நமது அஹ்மதிகளிடமும் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன என்பதை நான் வருத்தத்துடன் கூறிக் கொள்கிறேன்.

எனவே, இறைவனுடைய இந்தக் கட்டளையை எப்போதும் நாம் கண் முன் நிறுத்த வேண்டும். அதாவது தீமைகளின் அருகில் கூட செல்லக் கூடாது. ஏனென்றால் பிறகு சய்த்தான் உங்களை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து விடுவான்.

எனவே, திருக்குர்ஆன் பார்வையை உயர்த்திப் பார்க்கக் கூடாது என்று மட்டும் கூறவில்லை. மாறாக பார்வையைக் கோர்க்கக் கூடாது; பார்வையை எப்போதும் தாழ்த்தியே வைத்திருக்க வேண்டும் என்று கூறுகிறது. இது திருக்குர்ஆனின் கட்டளையின் அழகு ஆகும். பார்வைகள் கீழே இருக்கும் போது அதன் விளைவாக சுதந்திரமாக சேர்ந்து பழகும் தொடர்புகளில் தடை ஏற்படும். மேலும் தீமைகளைப் பார்க்கவே கூடாது. தீமையான ஆபாசமான மற்றும் ஒழுங்கீனமான படங்களைப் பார்க்கிறார்கள். பிறகு அதிலிருந்தும் தடை ஏற்படும். பிறகு சுதந்திரம் என்ற பெயரில் இப்படிப்பட்டவைகளைக் கூறக்கூடிய தனது கதைகளைக் கூறக்கூடிய மக்கள் மத்தியில் மற்றவர்களையும் இதன் பக்கம் இழுக்கக்கூடியவர்களின் மத்தியில் உட்காரக் கூடாது. Facebook, Skype போன்றவற்றின் மூலம் ஆண், பெண் ஒருவர் மற்றவருடன் பேசக்கூடாது. ஒருவர் மற்றவருடைய முகத்தைப் பார்க்கக் கூடாது. இதனை ஒருவர் மற்றவருடன் தொடர்பு கொள்வதற்கு வழியாகவும் அமைத்துக் கொள்ளக் கூடாது.

ஏனென்றால் அல்லாஹ் கூறுகின்றான்: இவை அனைத்தும் வெளிப்படையாகவும் மறைவாகவும் உள்ள தீமைகளாகும். இவற்றின் முடிவு என்னவாகும் என்றால் நீங்கள் உங்களது உணர்வுகளின் எழுச்சியில் மூழ்கி விடுவீர்கள். உங்களது அறிவும், சிந்தனையும் முடிந்து விடும். இறுதியில் அல்லாஹ்வின் கட்டளைகளை மீறி அவனது கோபத்திற்கு ஆளாகி விடுவீர்கள்.

மேலும் இன்றைய காலத்தில் இயல்பிற்கு மாற்றமானதும், அதன் காரணமாக அல்லாஹ் ஒரு சமுதாயத்தையே அழித்திருக்கக்கூடியதுமான ஒரு வெட்கங்கெட்ட செயலுக்கு ஆதரவு அளிக்கப்பட்டு வருகின்றது. அரசாங்கங்கள் ஓரின திருமணத்தை ஆதரிக்கும் சட்டத்தை இயற்றி வருகின்றது. அதாவது தீமைக்கு ஆதரவு அளிப்பதற்கு அதனை பரப்புவதற்கு அரசாங்க அளவில் முயற்சிகள், சட்டங்கள் இயற்றப்பட்டு வருகின்றன. எந்த அளவு என்றால் ஓர் அரசாங்கத்தின் தலைவராகிய பிரதமர், உலகம் முழுவதும் ஓரின திருமணச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம் எனக் கூறுகின்றார். மேலும் இதற்காக நாம் உலகில் முயற்சிகள் செய்வோம் எனவும் சிலர் கூறியுள்ளனர். இவ்வாறு ஒரு பிரதமர் கூறியுள்ளதாக செய்தி வெளி வந்துள்ளது. உண்மை என்னவென்றால் இறைவனின் பிடியினை இவர்கள் அழைக்கின்றார்கள் என்பதாகும். பிறகு ஒரு நாட்டின் மிகப்பெரிய பாதிரியார் இவர் தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவராவார். ஆப்பிரிக்கர்கள் இப்போது வரை இதுபோன்ற இயல்பிற்கு எதிரான திருமணங்கள் நடைபெறக் கூடாது. இதற்கு சட்டங்கள் இயற்றப்படக் கூடாது என்றே கூறி வருகின்றனர்.

ஆனால் பைபிளைப் படிக்கக்கூடிய அதனைப் பற்றி பேசக்கூடிய அதனை போதிக்கக்கூடிய பாதிரியார், இதனாலேயே ஒரு சமுதாயம் அழிக்கப்பட்டது என்றும் எழுதியுள்ளார். இது பைபிளிலும் உள்ளது. அவர் கூறுகின்றார்: இப்படிப்பட்ட ஓரின திருமணங்கள் செய்யக்கூடிய இணைகள் சொர்க்கத்திற்கு செல்லமாட்டார்கள் என்றால், பிறகு நான் நரகத்திற்கு செல்வதையே விரும்புவேன் எனக் கூறியுள்ளார்.

ஆக, இதுவே இவர்களது நிலைமையாக உள்ளது. இன்றைய உலகில் தீமைகள் எல்லைமீறி விட்டன. நினைவில் கொள்ளுங்கள். இந்த தீமைகள் இவ்வாறே வெளிப்படையாக பரவிக் கொண்டே சென்றது என்றால், அல்லாஹ்வின் கட்டளையின் பக்கம் உலகம் முகம் திருப்பவில்லை என்றால், கவனம் செலுத்தவில்லை என்றால், சமுதாயங்கள் தனது முடிவுகளைச் சந்திக்க நேரிடும். இது நிச்சயமாக இவ்வுலகையும் நரகமாக்கும். அல்லாஹ் மறுமையில் அவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்வான் என்பது அவனுக்கே தெரியும்.

தற்போதைய மருத்துவ ஆராய்ச்சிகளும் தெளிவாக இதனைக் கூற ஆரம்பித்துள்ளன. அதாவது எய்ட்ஸ் நோய் இப்படிப்பட்ட மக்கள் மத்தியில் மிக வேகமாகப் பரவுகிறது. அதாவது ஆண்கள் ஆண்களுடனும், பெண்கள் பெண்களுடனும் திருமணம் செய்து பயங்கரமான குற்றத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் எனக் கூறுகிறது. அல்லாஹ் பல்வேறு வழிகளில் தண்டனையை வழங்குகின்றான். ஒரு சமுதாய்தை கல்மாரி பொழியச் செய்து தண்டனை கொடுத்ததால் அனைத்து சமுதாயங்களையும் அவ்வாறே தண்டிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. இந்த H.I.V. எய்ட்ஸ் நோய் போன்றவை எப்படிப்பட்டதென்றால் பயங்கரமான வேதனை அளிக்கக்கூடிய முடிவு வரை இழுத்துச் செல்லும்.

எனவே, எந்த வேகத்துடன் உலகில் தீமைகள் பரப்பப்படுகின்றதோ இந்த நேரத்தில் ஓர் அஹ்மதியின் பணி என்னவென்றால் அதனை விட அதிகமாக தனது இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்தி தன்னையும் உலகத்தையும் இந்த பயங்கரமான அழிவிலிருந்து காப்பாற்ற முயற்சி செய்ய வேண்டும். இந்த உலகவாதிகள் தம்மைத்தாமே அழித்துக்

கொள்வதற்காக இருக்கிறார்கள். இந்த உலகவாதிகள், அரசியல் நோக்கினை அடைவதற்காக இப்படிப்பட்ட ஒரு பிரிவினரை மகிழ்ச்சி அடையச் செய்வதற்காக இறைவனுடைய சட்டத்தை மீறுகின்றார்கள். முழு உலகத்திலும் தீமைகளைப் பரப்ப முயற்சி செய்கின்றனர். பிறகு இதன் முடிவு அழிவு ஆகும். இப்படிப்பட்ட மக்களுடன் கொண்ட அனுதாபத்திற்கு நாம் இவர்களிடம் அல்லாஹ் மிகவும் கருணை காட்டக்கூடியவனும், பாவங்களை மன்னிக்கக் கூடியவனும் ஆவான். அவன் பாவமன்னிப்பிற்கான பாதையினை திறந்தே வைத்திருக்கின்றான் என்று கூறுவது அவசியமாகும்.

**அவன் கூறுகின்றான்:**

وَالَّذِينَ إِذَا فَعَلُوا فَاحِشَةً أَوْ ظَلَمُوا أَنْفُسَهُمْ ذَكَرُوا اللّٰهَ فَاسْتَغْفَرُوا
لِذُنُوبِهِمْ وَمَنْ يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا اللّٰهُ

*தீமைகளில் மூழ்கி இருக்கக்கூடியவர்கள் அல்லது தனது நஃப்ஸின் மீது அநீதியிழைத்துக் கொண்டவர்கள் தனது இறைவனை நினைவு கூறட்டுமாக! தனது பாவங்களுக்கு மன்னிப்பு கோரட்டுமாக! மேலும் அல்லாஹ்வைத் தவிர எவராலும் மன்னிக்க முடியாது. (3:136)*

எனவே இது எல்லா விதமான தீமைகளையும் குறிக்கும். பிடிவாதம் இல்லாமல் அல்லாஹ்வின் அச்சம் இருக்கும் என்றால் அல்லாஹ் மன்னித்து விடுகின்றான். அல்லாஹ்வை விட அதிகமாக பாவங்களை மன்னிக்கக்கூடியவர் எவருமில்லை. எனவே நான் ஆரம்பத்தில் கூறிய அனைத்து வித தீமைகளிலிருந்து தானும் தவிர்ந்திருப்பதற்கும், தவிர்ந்திருப்பதற்கான வழியினைக் காண்பிப்பதற்கும் ஒவ்வொரு அஹ்மதியும் முயற்சி செய்ய வேண்டும். இது அவர் மீது கடமையாகும். அல்லாஹ் வரம்பு மீறாதவர்களை மன்னித்து விடுகின்றான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அவர்கள், ஏதாவது தீமையான காரியங்களைச் செய்தாலோ அல்லது தனது நஃப்ஸின் மீது அநீதி இழைத்தாலோ, பிறகு இப்படிப்பட்ட நிலையிலையே இறைவனை நினைவு கூர்ந்தால் இறைவனிடம் மன்னிப்புக் கோரினால் தனது பாவங்களின் மீது பிடிவாதம் கொள்ளாமல் இருந்தால் அவர்களது இறைவன் அவர்களது பாவங்களை மன்னிப்பான். அல்லாஹ், தீமைகளில் மூழ்கியிருக்கக்கூடிய ஒவ்வொருவருக்கும் அறிவை வழங்கட்டுமாக! அவர்கள் இறைவனது பிடியிலிருந்து பாதுகாக்கப் படட்டுமாக! இந்த விசயங்களின் விளக்கத்தை எடுத்துரைக்க வேண்டிய அவசியத்தை நான் உணர்ந்து வந்தேன். எனவே நான் சிறிதளவு விளக்கம் கொடுத்துள்ளேன். ஏனென்றால் இன்றைய நாட்களில் இதைப் பற்றி பரவலாக கேள்விகள் கேட்கப்படுகின்றன.

**இந்த வசனங்களின் அடுத்த கட்டளையில் இறைவன் இதனை கூறியுள்ளான்:**

وَلَا تَقْتُلُوا النَّفْسَ الَّتِي حَرَّمَ اللّٰهُ إِلَّا بِالْحَقِّ

*அதாவது அல்லாஹ் தடுத்துள்ள உயிரை அனுமதியின்றி கொலை செய்யாதீர்கள். (6:152)*

இந்த கட்டளை இதன் பக்கம் கவனமூட்டுகிறது. அதாவது அண்டை அயலாருக்குரிய உரிமையைச் செலுத்துங்கள். தனது சகோதரர்கள், தனது நண்பர்கள், தன்னுடன் தொடர்பு கொள்ளக்கூடியவர்களது உரிமையை நீதியுடனும் நேர்மையுடனும் அளியுங்கள். கொலை என்பது வெறும் உயிரைக் கொலை செய்வது மட்டும் கிடையாது. மாறாக தொடர்பை முறிப்பது, நேர்மையற்ற முறையில் மற்றவர்களது உரிமைகளைப் பறிப்பது, இதுவும் கொலை ஆகும். மற்றவர்களை உணர்வு ரீதியில் காயப்படுத்துவது இதுவும் கொலை ஆகும். ஒருவரை கொலை செய்ததற்கு சமமாக இழிவுபடுத்துவதும் இந்தப் பிரிவின் கீழ் வருகிறது. ஒருவரது சுய மரியாதையைச் சீரழிப்பதும் கொலை செய்வதாகும். இதைப் போன்று ஆன்மீக ரீதியிலும் கொலை நடைபெறுகின்றது.

எவ்வாறிருப்பினும் அல்லாஹ் கூறுகின்றான்: இவை அனைத்தும் எப்படிப்பட்ட கொலை என்றால், இவற்றை செய்வதிலிருந்து இறைவன் உங்களை தடுத்துள்ளான். ஒவ்வொரு கொலையின் இறுதி முடிவு சமூகத்தில் கூச்சல், குழப்பத்தை ஏற்படுத்துவதும், பயனற்றதும் ஆகும். இந்த விசயங்கள் இறைவன் மிகவும் வெறுக்கக்கூடிய விசயங்களாகும்.

அல்லாஹ், إِلَّا بِالْحَقِّ அதாவது தண்டனைக்கு தகுதியானவரைத் தவிர எனக் கூறுகின்றான். இதற்கும் சட்டங்களை தனது கையில் எடுப்பதற்கு எவ்வித அனுமதியும் இல்லை. பழிவாங்குவதற்கு, தனது போட்டி பொறாமையை வெளிப்படுத்துவதற்கு, சட்டத்தை கையில் எடுப்பதற்கு அனுமதி இல்லை. தண்டனைக்குரியவர்க்கு தண்டனை அவர் செய்த பாவத்தின் அளவுக்கே வழங்கப்படும். மேலும் இந்த தண்டனையும் குற்றம் செய்தவர் திருந்த வேண்டும் என்பதற்காகவே வழங்கப்படுகிறது. மேலும் இதன் மூலம் அவர் சமூகத்தின் சிறந்த அங்கமாக மாறி கூச்சல் குழப்பத்தை ஒழிப்பதற்கு வழியாக அமைய வேண்டும் என்பதாலேயாகும். ஆனால் இங்கு இந்த விசயமும் தெளிவு பெற வேண்டும். அதாவது தண்டனை வழங்குவதற்கு பழிவாங்குவதற்குரிய உரிமை ஒவ்வொருவருக்கும் கிடையாது. மாறாக அந்த உரிமை சட்டத்திற்கு உண்டு. சட்டம் நீதியினை நிலைநாட்டியவாறு தண்டனை வேண்டும். அநீதியிழைக்கக்கூடாது. எந்த அளவுக்கென்றால் ஒரு கொலையாளிக்கு தண்டனையை வழங்கக்கூடிய உரிமையை ஒரு நபருக்கோ அல்லது கொலை செய்யப்பட்டவரின் வாரிசுகளுக்கோ கொடுக்கப்படவில்லை. மாறாக, இந்த உரிமை சட்டத்திற்குரியதாகும். இன்றைய காலத்தில் தான் இதற்கான சட்டங்களை இவர்கள் இயற்றி வருகின்றார்கள். ஆனால் நமக்கு அல்லாஹ் முன்பே கட்டளையிட்டுள்ளான். நீதியினை நிலைநாட்டியவாறு நீங்கள் குற்றவாளிக்கு தண்டனை அளியுங்கள் எனக் கூறியுள்ளான்.

ஒரு சட்டம் மட்டுமே, ஒரு கொலையாளிக்கு தூக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்றால் வழங்கும். இதைப் போன்றே சமூகத்தில் சட்டத்திற்குக் கீழ் மற்ற தண்டனைகளும் உள்ளன. கொலைக்குப் பதிலாக தொடர்பை துண்டிக்க வேண்டும் என்றாலோ அல்லது பாயிகாட் செய்வதாக இருந்தாலும் இதற்குரிய அதிகாரம் சம்பந்தப்பட்ட அமைப்பிற்கே உரியதாகும். நமது ஜமாஅத்திலும் தண்டனை வழங்கக்கூடிய நிலை வழக்கத்தில் உள்ளது என்றால் அது சீர்திருத்தத்திற்காகத்தான் உள்ளது. எந்தவித அநீதியிழைப்பதற்கோ வரம்பு மீறுவதற்கோ அல்ல. எந்தவித தண்டனை கொடுக்கப்பட்டாலும் அது சீர்திருத்தத்திற்காகவே கொடுக்கப்படுகின்றது. அது அநீதியிழைப்பதற்காக கொடுக்கப்படுவது கிடையாது. அநீதியும், வரம்பு மீறுதலும் கொலைக்குச் சமமானதாகும்.

நான் இதனை பலமுறை பார்த்தும் இருக்கிறேன். குறித்தும் வைத்திருக்கின்றேன். அதாவது இரு பிரிவினருக்கிடையில் பிரச்சனை ஏற்பட்டால், வழக்கு தொடரப்பட்டால் தீர்ப்பு வழங்கக்கூடிய அமைப்பு தனது அறிவு மற்றும் சாட்சிகளுக்கேற்ப ஒரு பிரிவினரை குற்றவாளி என அறிவிக்கும். அதன் பிறகு அவர்களுக்கு தண்டனை வழங்குவது குறித்தும் சிபாரிசு செய்யப்படும். ஆனால் எதிர் பிரிவினர் அதாவது பாதிக்கப்பட்ட பிரிவினர் குறைந்தபட்ச தண்டனையே கொடுக்கப்பட்டுள்ளது. அதிகமான தண்டனை கொடுக்கப்பட வேண்டும் என கோபப்படுகின்றார்கள். அதாவது தீர்ப்பு அவர்களது விருப்பப்படி இருக்க வேண்டும் எனக் கருதுகின்றார்கள். இவ்வாறு இரு பிரிவினருக்கும் தீர்ப்பு வழங்குவதற்கான உரிமை வழங்கப்பட்டால் ஒரு கொலைக்குப் பிறகு மற்றொரு கொலை நடைபெற்றுக் கொண்டே செல்லும். திருக்குர்ஆன் இதிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும் என நம்மிடம் கூறுகின்றது.

தண்டனை வழங்குவதன் அசல் நோக்கம், சமூகத்தில் அநீதியினை ஒழித்து, சீர்திருத்தம் செய்வதே ஆகும். அநீதியிழைத்தவருக்கு அவர் செய்த அநீதியை உணர வைப்பதாகும். இரண்டு மூஃமின்களுக்கு மத்தியில் இப்படிப்பட்ட பிரச்சனை ஏற்பட்டால், அவர்களுக்கு அதனை உணர்த்தினால் அவர்கள் அதனை ஏற்றுக் கொள்கின்றனர். ஆக இதுதான் தண்டனை வழங்குவதற்கான அசல் நோக்கமும், எண்ணமும் ஆகும். அதாவது சீர்திருத்த வேண்டும். மேலும் சமூகத்தில் சண்டை சச்சரவுகளினால் ஏற்படக்கூடிய கொலையை நிறுத்த வேண்டும் என்பதே ஆகும்.

இதன் பின்னர் நான், அடுத்த வசனத்தில் கூறப்பட்ட கட்டளையின் பக்கம் வருகின்றேன். **அல்லாஹ் கூறுகின்றான்:** وَلَا تَقْرَبُوا مَالَ الْيَتِيمِ إِلَّا بِالَّتِي هِيَ أَحْسَنُ

***அநாதைகளின் உடைமையின் பால் முறையின்றி நெருங்காதீர்கள். (6:153)***

இங்கு இறைவன் சமூகத்தின் பலவீனமான வர்க்கத்தின் உரிமைகளை பாதுகாப்பதன் பக்கம் கவனமூட்டுகின்றான். நீங்கள் அநாதைகளின் உடைமைகளின் பால் நெருங்காதீர்கள் என்று இருந்தால் பிறகு அநாதைகளின் வருமானம் அல்லது சொத்துகள் பாழாகி விடுவதற்கான வாய்ப்பு உள்ளது. அதனால் தான் கூறுகின்றான். அநாதைகளின் உடைமைகளின் பால் நீங்கள் முறையான வகையில் செல்ல வேண்டும். முடிந்த அளவு உடைமைகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத அளவு நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். அநாதைகளின் செல்வங்களை அழிக்க வேண்டும் அல்லது காலி பண்ண வேண்டும் என்ற எண்ணத்தில் நெருங்கக் கூடாது. மாறாக

அநாதைகளுக்கு நன்மை ஏற்படும் வகையில் அவர்களது சொத்துக்களையும், செல்வங்களையும் உபயோகப்படுத்துங்கள்.

எனவே இது கட்டாயமான கட்டளையாகும். அதாவது நீங்கள் அநாதைகளின் செல்வங்களைப் பாதுகாக்க ஏற்பாட்டை செய்ய வேண்டும். நம்பி ஒப்படைக்கப்பட்டவர் என்ற ரீதியில் நெருங்கிய உறவினரோ அல்லது யாரிடம் அநாதை பொறுப்பாக ஒப்படைக்கப்படுகின்றதோ அவர் அநாதையின் செல்வத்தை பாதுகாக்க வேண்டும். கண்காணித்து வர வேண்டும். ஜமாஅத்தும் அநாதைகளின் செல்வங்களைப் பாதுகாக்க வேண்டும். கண்காணிக்க வேண்டும். சமூகமும், நாட்டின் சட்டங்களும் அவர்களுடைய செல்வங்களைப் பாதுகாக்க வேண்டும். கண்காணிக்க வேண்டும். இதனை எவ்வாறு பாதுகாக்க வேண்டும்? இதற்கும் பல்வேறு வழிமுறைகள் உள்ளன.

அநாதைகளின் செல்வங்களை பெருக்கக்கூடிய வகையில் உபயோகப்படுத்துங்கள். அதாவது வியாபாரத்தில் ஈடுபடுத்துங்கள். இதன் மூலம் அநாதைகளுக்கு பலன் கிடைக்க வேண்டும். இதன் மூலம் அறிவு வளர்ச்சி பெறாத அந்த அநாதை வர்க்கத்திற்கு தாய், தந்தையரின் நிழல் இல்லாமல் வாழக்கூடிய அந்த பிள்ளைகளுக்கு அவர்களது சொத்துகள் அழிந்து விடுவதற்கு ஆபத்து இருக்கும் போது அதனை முறையாக இவ்வாறு பயன்படுத்துங்கள். அதனை இவ்வாறு வியாபாரத்தில் ஈடுபடுத்துங்கள். அதனை இவ்வாறு முதலீடு செய்யுங்கள். அந்த செல்வம் பெருக வேண்டும்.

இது மிகப்பெரிய பொறுப்பாகும். அநாதைகளின் உடைமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்ற கட்டளையின் மூலம் உறவினர்கள் மீதும், சமூகத்தின் மீதும் பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. அல்லாஹ் மற்றோரிடத்தில் கூறுகின்றான்: நீங்கள் இந்த பொறுப்பை நிறைவேற்றவில்லை என்றால், சாக்குப்போக்குகளைக் கூறி அநாதைகளின் செல்வங்களை விழுங்கிவிட முயற்சி செய்தீர்கள் என்றால் இதற்கு மிகவும் கடுமையான தண்டனை உண்டு.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

إِنَّ الَّذِينَ يَأْكُلُونَ أَمْوَالَ الْيَتَامَىٰ ظُلْمًا إِنَّمَا يَأْكُلُونَ فِي بُطُونِهِمْ نَارًا

*அதாவது அநியாயமாக அநாதைகளின் செல்வங்களை விழுங்கக்கூடியவர்கள் நிச்சயமாக அவர்கள் தனது வயிறுகளில் நெருப்பை நிரப்புகின்றனர். (4:11)*

**மேலும் கூறுகின்றான்:**

وَسَيَصْلَوْنَ سَعِيرًا *நிச்சயமாக அவர்கள் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பில் நுழைவார்கள். (4:11)*

திருக்குர்ஆனின் போதனைகள் ஒரு பிரிவினர்க்கு மட்டும் உரிமையை பெற்றுத்தரக் கூடியதும், மற்ற பிரிவினருடைய உரிமையை அமுக்கக் கூடியதும் கிடையாது. அநாதைகளின் செல்வங்களை அனுமதியற்ற முறையில் விழுங்கி தனது வயிற்றில் நெருப்பை நிரப்புகின்றீர்கள் என்று கூறுவதுடன், நீதியினை நிலைநாட்டியவாறு நம்பிக்கை மற்றும் நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றியவாறு அநாதைகளின் செல்வங்களை செலவு செய்கின்றீர்கள் என்றால் பிறகு இது அநீதி ஆகாது. எனவே அநாதைகளின் வளர்ப்பிற்காக ஆகக்கூடிய செலவுகளை அவர்களது கல்வி மற்றும் தர்பிய்யத்திற்காக ஆகக்கூடிய செலவுகளைச் செய்வதற்கு அனுமதி இருக்கின்றது. ஆனால் அநீதி இழைக்கக்கூடாது. நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றில் நம்பிக்கை துரோகம் செய்யக் கூடாது.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

وَلَا تَأْكُلُوهَا إِسْرَافًا وَبِدَارًا أَن يَكْبَرُوا *அவர்கள் வாலிபப் பருவத்தை அடைந்து விடுவார்கள் என்ற அச்சத்தினால் அவர்களது செல்வங்களை அனுமதிக்கப் படாத வகையில் அவசர அவசரமாகவும் அளவுகடந்தும் விழுங்காதீர்கள். (4:7)*

**அல்லாஹ் கூறுகின்றான்:**

(4:7) وَمَن كَانَ غَنِيًّا فَلْيَسْتَعْفِفْ வசதி படைத்தவர்களாக பணக்காரர் களாக இருக்கக்கூடியவர்கள் இந்த செல்வங்களில் இருந்து முழுமையாக தவிர்ந்திருக்க வேண்டும்.

ஆனால் ஏழையாக இருக்கக்கூடியவர், கல்வி மற்றும் இதர செலவுகளைத் தாங்கிக் கொள்ள முடியாதவர்கள் குறித்து கூறுகின்றான்:

(4:7) فَلْيَأْكُلْ بِالْمَعْرُوفِ அதாவது நியாயமான முறையில் இதிலிருந்து எடுத்துக் கொள்ளலாம். சரியான முறை என்பது என்ன? அதாவது அந்த அநாதைகளுக்காக செலவு செய்யக்கூடியதை எடுத்துக் கொள்ளலாம். அல்லது மிகவும் வறுமையான நிலை என்றால் வாழ்வை நடத்துவதற்கு வழியில்லை என்றால் அவருடைய பொறுப்பு மற்றும் கண்காணிப்பின் கீழ் இருப்பதால் சிறிதளவு அதிலிருந்து சேவைக்காக எடுத்துக் கொள்ளலாம்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

حَتّٰى يَبْلُغَ اَشُدَّهٗ ***அதாவது அவர்கள் தனது வாலிபப் பருவத்தை உறுதியான வயதை அடையும் வரை (6:153)*** தனது செல்வம் மற்றும் சொத்துக்களை பாதுகாக்க மற்றும் கவனிக்கக்கூடிய திறமையைப் பெறும் வரை பாதுகாக்க வேண்டும். எனவே இதுதான் அநாதைகளுக்குரிய உரிமையாகும். ஒரு பலவீனமான வர்க்கத்தின் உரிமையாகும். அவர்கள் அறிவான வாலிபப் பருவத்தை அடையும் வரை அவர்களது சொத்துக்களை செல்வங்களை பாதுகாக்க வேண்டும். மேலும் அதனை அவர்கள் கண்காணித்துக் கொள்ளத் தகுதியானவர்கள் ஆகும் போது அவர்களது செல்வங்களை அவர்களிடம் ஒப்படைத்து விட வேண்டும்.

இங்கு இதுவும் தெளிவு பெற வேண்டும். சில சமயங்களில் சில அநாதைகள் வாலிபப் பருவத்தை அடைந்த பிறகும் கூட அறிவுரீதியாக அவர்கள் தனது செல்வங்களைப் பாதுகாக்கக்கூடிய நிலையில் இருப்பதில்லை. பிறகு எப்போது வரை அதற்கு தகுதியாக மாட்டார்களோ அல்லது எப்போதும் குறைவான அறிவினைக் கொண்டவர்களாகவே இருக்கிறார்கள் என்றால் நிரந்தரமான முறையில் அவர்களது செல்வங்களைப் பாதுகாப்பது கடமையாகிறது. இப்படிப்பட்ட மக்களும் உள்ளனர். அதாவது குறைவான அறிவைக் கொண்ட போதிலும் திருமணம் செய்யத் தகுதியானவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு திருமணம் நடைபெற்றால் பிள்ளைகள் பிறந்தால் பிறகு பிள்ளைகள் வாலிபப் பருவத்தை அடையும் வரை உறவினர்கள், சமூகத்தினர் மற்றும் ஜமாஅத்தினரின் பணி இந்த பொறுப்பை நிறைவேற்றுவதாகும். இவர்களது உடைமைகளைப் பாதுகாப்பதாகும்.

பலவீனமாவர்கள் மற்றும் அநாதைகளின் உரிமைகள் பற்றிய அல்லாஹ்வின் கட்டளையை விளக்கியவாறு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உங்களில் வசதி படைத்தவர்களில் சரியான அறிவில்லாதவர்கள் இருந்தால் உதாரணமாக, அநாதைகள் அல்லது வாலிபப் பருவத்தை அடையாதவர்கள் போன்றோர் மேலும் அவர்கள் தனது அறிவின்மையின் காரணமாக தமது செல்வங்களை அழித்து விடக் கூடிய நிலை இருந்தால் பிறகு நீங்கள் காப்பாளர் என்ற ரீதியில் அவர்களது அனைத்து செல்வங்களையும் தனது ஆதிக்கத்தின் கீழ் எடுத்துக் கொள்ளுங்கள். மேலும் வியாபாரம் மற்றும் அவர்களது வாழ்க்கைத் தேவையைக் கொண்டிருக்கக் கூடிய அந்த செல்வங்களை இந்த முட்டாள்களிடம் ஒப்படைக்காதீர்கள். இந்த செல்வங்களிலிருந்து அவசியத்திற்கேற்ப உண்ணவும் உடுத்தவும் கொடுத்து வாருங்கள். அவர்களிடம் சரியான சிறந்த வார்த்தைகளைக் கூறி வாருங்கள். அதாவது அவர்களது அறிவும் கண்ணியமும் உயரக்கூடிய விசயங்களைக் கூறி வாருங்கள். இதன் மூலம் அவர்களுக்கு தேவையான தர்பிய்யத் கிடைக்க வேண்டும். அவர்கள் அறிவீனர்களாகவும், அனுபவமற்றவர்களாகவும் இருந்து விடக்கூடாது. அவர்கள் வியாபாரியின் மகன்களாக இருந்தால் அவர்களுக்கு வியாபாரம் செய்யக்கூடிய வழிமுறைகளைக் கற்றுக் கொடுங்கள். வேறு ஏதாவது தொழில் செய்யக்கூடியவர்களாக இருந்தால் அந்த தொழில்ரீதியான விசயங்களில் அவர்களை உறுதியாக்குங்கள். உடனுக்குடன் அவர்களுக்கு கற்றுக் கொடுத்துக் கொண்டே செல்லுங்கள். தனது கற்பித்தலுக்குரிய சோதனையை அவ்வப்போது செய்து கொண்டே வாருங்கள். நீங்கள் கற்றுக் கொடுத்ததை அவர்கள் புரிந்துள்ளார்களா? இல்லையா? என சோதித்து வாருங்கள். திருமணம் செய்வதற்கு தகுதியானவராகி விட்டால் அதாவது அவர்கள் ஏறக்குறைய 18 வயதை அடைந்தால் அவர்களிடம் அவர்களது செல்வங்களைப் பாதுகாக்கக்கூடிய அறிவு ஏற்பட்டு விட்டதா எனப் பாருங்கள். பிறகு அவர்களது செல்வங்களை அவர்களிடம் ஒப்படையுங்கள். வீணான செலவுகள் என்ற ரீதியில் அவர்களது செல்வங்களைச் செலவு செய்யாதீர்கள். இவர்கள் பெரியவர்களாகி விட்டால் அவர்களது செல்வங்களை அவர்கள் வாங்கிக் கொள்வார்கள் என்ற அச்சத்தினால் அவர்களது செல்வங்களைச் சேதப்படுத்தாதீர்கள். எவர் வசதி படைத்தவராக இருக்கின்றாரோ அவர் அவர்களது செல்வங்களிலிருந்து சேவை செய்வதற்காக எதனையும் எடுக்க வேண்டாம். ஆனால் தேவையுடையவர் சரியான முறையில் எடுத்துக் கொள்ளலாம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அரபு நாட்டில் செல்வங்களைப் பாதுகாக்கக் கூடியவர்களிடையில் இந்த விசயம் பிரபல்யமாக இருந்தது. அதாவது அநாதைகளின் பாதுகாவலர் அவர்களது செல்வங்களிலிருந்து எடுக்க விரும்பினால் முடிந்த அளவு இந்த சட்டத்தை அவர்கள் கடைபிடித்து வந்தார்கள். அதாவது அநாதைகளின் செல்வங்களில் வியாபாரம் மூலமாக கிடைக்கக்கூடிய இலாபத்திலிருந்து அவர்கள் எடுத்து வந்தனர். அசல் முதலீடு செய்த செல்வத்தை அவர்கள் வீணாக்குவதில்லை. இந்த வழக்கத்தின் படியே நீங்கள் செய்ய வேண்டும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அநாதைகளின் செல்வத்தை திரும்ப ஒப்படைக்கும் போதும் சாட்சிகளின் முன்னிலையில் அவர்களது செல்வங்களை ஒப்படையுங்கள். மரணமடையக் கூடிய ஒருவருடைய பிள்ளைகள் பலவீனமான சிறு வயதினை உடையவராக இருக்கக் கூடிய நிலையில் அவர் பிள்ளைகளின் உரிமை பாதிக்கக்கூடிய வகையில் எந்தவொரு வஸிய்யத்தும் செய்யக் கூடாது. அநாதைகளின் மீது அநீதியிழைக்கும் வகையில் அநாதைகளின் செல்வங்களை சாப்பிடக் கூடியவர்கள், அவர்களின் செல்வங்களை உண்ணவில்லை. மாறாக நெருப்பை உண்கிறார்கள். இறுதியில் எரியக்கூடிய நெருப்பில் போடப்படுவார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவன் நேர்மை மற்றும் நீதிக்கு எத்தனை அம்சங்களை கூறியிருக்கின்றான் என்பதைப் பாருங்கள். ஆக உண்மையான நேர்மை மற்றும் நீதி இந்த எல்லாவித அம்சங்களையும் கொண்டதேயாகும். எனவே முழுமையான முறையில் அறிவினை செலுத்தியவாறு நேர்மையின் எல்லாவித அம்சங்களையும் கைக்கொள்ளவில்லை என்றால் அப்படிப்பட்ட நேர்மையும் நீதியும் தனக்குள் மறைவான நம்பிக்கை துரோகத்தை வைத்திருக்கும். நேர்மையின் எல்லா வகையினையும் கவனத்தில் கொள்ளவில்லை என்றால் பிறகு அதில் மறைவான நம்பிக்கை துரோகம் வந்து விடும். எனவே மிகவும் கவனமுடையவராக இருந்து இந்த உரிமையைச் செலுத்த முயற்சி செய்ய வேண்டும்.

திருக்குர்ஆனில் அல்லாஹ் தக்வாவைப் பற்றி திரும்பத் திரும்ப அறிவுறுத்துகின்றான். இதனால் தன்னை ஆராயுங்கள். பலவீனமானவர்களுக்குரிய உரிமை செலுத்தப்படுகிறதா? இல்லையா? எனப் பாருங்கள். நேர்மை மற்றும் நீதியின் தரத்தை ஆராய்ந்து கொண்டே இருங்கள். இதனுள் மறைவான நம்பிக்கை துரோகம் இருந்துவிடக் கூடாது. மேலும் அவை நெருப்பை வயிற்றில் நிரப்புவதற்குக் காரணமாக அமைந்து விடக் கூடாது.

**பிறகு அடுத்ததாக இறைவன் கூறுகின்றான்:**

وَاَوْفُوا الْكَيْلَ وَالْمِيْزَانَ بِالْقِسْطِ *மேலும் அளவையும், நிறுவையையும் நீதியுடன் முழுமையாகக் கொடுங்கள். (6:153)*

இங்கு பொதுவாக தமது வியாபாரத்தை நீதி மற்றும் நேர்மையின் எதிர்பார்ப்பை நிறைவேற்றியவாறு செய்வதற்கு கட்டளையிடப்பட்டுள்ளது. முதலில் அநாதைகள் மற்றும் பலவீனமானவர்களின் உரிமை நிலைநாட்டப்பட்டது. நேர்மையுடன் அவர்களது உரிமைகளைச் செலுத்துவதற்கு கட்டளையிடப்பட்டது. பிறகு பரஸ்பரம் உள்ள வியாபாரத்தில் தூய்மை மற்றும் உண்மையுடன் செயல்படுவதற்கு கட்டளையிடப்பட்டுள்ளது. எந்தவிதமான ஏமாற்றுதலும் இருக்கக்கூடாது. மற்றவர் அறிவீனராக இருந்தாலும் கூட ஏமாற்றுதல் இருக்கக் கூடாது எனக் கூறுகின்றது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் ஏதாவது பொருளை விற்கின்றீர்கள் என்றால், அதில் ஏதாவது குறை இருக்கிறது என்றால் அதனை விற்பதற்கு முன்னதாக கூறி விடுங்கள். இதன் மூலம் வாங்கக்கூடியவருக்கு நான் வாங்கக்கூடிய பொருளில் இந்த குறை இருக்கிறது என தெரிய வேண்டும்.

மற்றோரிடத்தில், வியாபாரக் கொடுக்கல் வாங்கலில் அளவையும் நிலுவையையும் சரியாக வைப்பதனைக் குறித்து **அல்லாஹ் கூறுகின்றான்:**

ذٰلِكَ خَيْرٌ وَّاَحْسَنُ تَاْوِيْلًا *இவ்வாறு செய்வது மிக்க நல்லதும், முடிவைப் பொருத்தவரை மிகச் சிறந்ததும் ஆகும். (17:36)*

அதாவது நல்ல வியாபாரியின், அதாவது சரியான முறையில் அளவையும், நிறுவையையும் கடைபிடிக்கக் கூடிய வியாபாரியின் புகழ் சிறந்ததாகவே இருக்கும். மேலும் நிறைய நுகர்வோரும் வருவர். இதன் விளைவாக அவரது வியாபாரம் மிக விரைவாக முன்னேற்றம் அடையும். ஏமாற்றுதல் இருந்தால் பிறகு வணிகம் அழிந்து விடும்.

**மற்றோரிடத்தில் இறைவன் கூறுகின்றான்:**

ஏமாற்றுவது குழப்பம் ஏற்படுவதற்குக் காரணமாக அமையும்.

ஆனால் வருத்தம் என்னவென்றால், எந்த அளவு திருக்குர்ஆன் கட்டளைகளைத் தெளிவாக எடுத்துரைக்கின்றதே, அதே அளவு முஸ்லிம்கள் நேர்மையிலிருந்து கீழே விழுந்து கொண்டே செல்கின்றனர்.

முஸ்லிம்களின் நேர்மை மற்றும் நீதியைக் கூறுவதாயிருந்தால் ஒரு மனிதர் தனது குதிரையை விற்பதற்காக பஜாருக்கு கொண்டு வந்தார். இதன் விலை 500 திர்ஹம் எனக் கூறினார். மற்றொரு சஹாபி அதனைப் பார்த்தார். அதனை விரும்பினார். மேலும் அந்த நபரிடம் நான் இதனை வாங்கிக் கொள்கிறேன். இது எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றது. ஆனால் இதன் விலை 500 திர்ஹம் கிடையாது என்றார். இதற்கு அந்த நபர் சற்று குறைவாக கேட்பார் என எண்ணினார். ஆனால் அவர் நேர்மாற்றமாக இது எவ்வளவு உயர்ந்த ரக குதிரை என்றால் இதன் விலை 2000 திர்ஹமாக இருக்க வேண்டும் என்றார். எனவே என்னிடமிருந்து 2000 திர்ஹமைப் பெற்றுக் கொள் என்றார். விற்கக்கூடியவர் மற்றும் வாங்கக்கூடியவர் பேசுகின்றனர். விற்கக் கூடியவர்கள் 500 திர்ஹமை விட மேலே வாங்க மறுக்கிறார். வாங்கக்கூடியவர் 2000 திர்ஹமை விட கீழே வர மறுக்கிறார். எனவே இதுதான் முஸ்லிம்களின் நிலையாக அன்று இருந்தது. இது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய நெருக்கத்திலும் அன்னாரின் சஹாபாக்களின் நெருக்கத்திலும் இருந்தவர்களின் நிலையாகும்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தனது ஒரு சம்பவத்தையும் எழுதியுள்ளார்கள்:**

அவர்கள் 19, 20 வயதினராக இருந்த போது சுற்றுப் பயணத்திற்காக காஷ்மீர் சென்றார்கள். அங்கு கம்பளியால் ஒருவிதமான கார்பெட் சிறப்பாக செய்யப்படும். இது அந்தப் பகுதியில் சிறப்புமிக்கதாகும். அது அவர்களுக்கு பிடித்தமானதாக இருந்தது. சில நாட்கள் அங்கு தங்க வேண்டியதிருந்தது. சுற்றுப் பயணம் செய்ய வேண்டியிருந்தது. எனவே அங்கு சென்றிருந்தார்கள். சுற்றுப்பயணம் சென்ற போது அந்த கார்பெட்டைப் பார்த்தார்கள். கார்பெட் தயார் செய்யக்கூடிய மனிதர் ஒருவர் நான் மிகவும் சிறந்த முறையில் கார்பெட் செய்வேன் என்றார். பிறகு அவர்கள் சரி, அன்பளிப்பாக கொண்டு போவதற்கு எனக்காக மூன்று நான்கு கார்பெட்களை தயார் செய்யுங்கள் என்றார்கள். அதற்குரிய அளவையும் கூறினார்கள். அதன் பின்னர் கூறுகின்றார்கள்: நான் திரும்ப வந்த போது நான் கூறிய அளவலிருந்து ஒவ்வொரு கார்பெட்டும் நீளத்திலும் அகலத்திலும் சிறியதாக இருந்தது. நல்ல வித்தியாசமும் தெரிந்தது. 6 இன்ச்சுகள் வரை சிறியதாக இருந்தது. அவர்கள் அந்த நபரிடம் நான் உம்மிடம் அளவையும் கூறினேன். இங்கு அதற்கான சாட்சிகளும் உள்ளனர். அவர்கள் முன்பு தான் நான் கூறினேன். இருந்தபோதிலும் நீர் அவ்வாறு செய்யவேயில்லை. ஆனால் அதே தொகையைக் கேட்கின்றீர்கள் எனக் கூறினார்கள். அதற்கு அந்த நபர் பரவாயில்லை! தொகையைக் குறைத்துக் கொள்ளுங்கள் எனக் கூறி வெட்கப்படுவதற்குப் பதிலாக நான் முஸ்லிம் ஆவேன். என்னை நீங்கள் இவ்வாறு செய்துள்ளாய்? அவ்வாறு செய்துள்ளாய்? என்று பேசுகின்றீர்கள் எனக் கூறிக் கொண்டே இருந்தார்.

எந்த விதமான தவறான செயலாக இருந்தாலும் முஸ்லிம் என்று கூறி அதனை நியாயப்படுத்துவது சாதாரணமாகி விட்டது. இது பழைய விசயம் ஒன்றுமில்லை. மாறாக என்னிடமும் ஒரு அரிசி வியாபாரி கூறினார். அதாவது பாகிஸ்தானைச் சேர்ந்த நாங்கள் தரமான பாசுமதி அரிசியை வெளியே அனுப்புவோம். அதில் மற்ற தரம் குறைந்த நீளமான அரிசியை எவ்வாறு கலப்படம் செய்வோம் என்றால் அதற்கான வழிமுறை இதுவாகும். அதாவது இரும்பால் ஆன 8, 10 இன்ச் அளவுகள் உள்ள டின்னால் ஆன குழாய் இருக்கும். அதனை பையின் நடுவின் வைப்போம். அதனை சுற்றிலும் உயர் தரமான அரியை வைப்போம். வெளியிலிருந்து பார்க்கும் போது உயர் தரமான பாசுமதி அரியாக அது தென்படும். அதன் பின்னர் அந்த குழாயை எடுத்து விடுவோம். பிறகு அது மற்ற அரிசிகளுடன் கலந்து விடும். யாருக்கும் எதுவும் தெரியாது என்றார். வாங்கக்கூடியவர் பார்க்கும் போது எந்த வித்தியாசமும் தெரியாது. எவ்வாறிருப்பினும் அரிசி அரிசிதான். எனவே இதுதான் வியாபாரத்தின் நிலையாகும்.

இதன் காரணமாக நீண்ட காலமாகவே பாகிஸ்தானிய அரிசி மார்க்கெட்டை இந்தியாவின் அரிசி மார்க்கெட் கைப்பற்றிக் கொண்டுள்ளது. இந்தியாவின் அரிசி பாகிஸ்தானின் அரிசியை விட தரம் குறைந்ததாகும். இருந்த போதிலும் இந்த கலப்படம் காரணமாக அந்த மார்க்கெட் பாகிஸ்தானின் அரிசி மார்க்கெட்டைக் கைப்பற்றிக் கொண்டுள்ளது. தற்போது பாகிஸ்தானைச் சேர்ந்த சில ஏற்றுமதியாளர்கள் (ஏனென்றால் அஹ்மதிகளும் அரிசி ஏற்றுமதி செய்கின்றனர்.) உயர் தரமான அரிசியை அவர்கள் கொண்டு வந்தாலேயொழிய வெளிநாட்டு மார்க்கெட்டில் கிடைக்காது. இந்த திருட்டுத்தனத்தின் காரணமாக வெளிமார்க்கெட்டுகளுக்கு இவ்வாறு ஏமாற்றுதல் நடைபெறுவது தெரிய வந்தது. பிறகு அவர்கள் பாகிஸ்தானிய ஏற்றுமதியாளர்களிடமிருந்து அரிசி வாங்குவதை நிறுத்தி விட்டார்கள். எனவே தற்போது

இந்தியாவின் ஏற்றுமதியாளர்கள் மட்டுமே அரிசியை வாங்குகிறார்கள். பிறகு கிரேடிங் செய்து அதனை வெளியே அனுப்புகிறார்கள்.

இவர்கள், இதன் மூலம் வியாபாரத்தில் பரக்கத் ஏற்படாது என்பதை சிந்திப்பதேயில்லை. தற்போது வியாபாரம் முடிவு பெற்று விட்டது.

**ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

வாங்கக்கூடியவரும் விற்கக்கூடியவரும் உண்மையைப் பேசினால் பொருளில் ஏதாவது குறையோ குறைபாடோ இருக்கும் என்றால் அதனை கூறிவிட வேண்டும். அதனால், அல்லாஹ் அவர்களது வியாபாரத்தில் பரக்கத்தை ஏற்படுத்துவான். வாங்கக் கூடியவரும், விற்கக் கூடியவரும் பொய் கூறினார்கள் என்றால், ஏதாவது குறையை மறைத்தார்கள் என்றால் அந்த வியாபாரத்திலுள்ள பரக்கத் நீங்கி விடும்.

எனவே பரக்கத்தைப் பெற வேண்டும் என்றால் நம்பிக்கை மற்றும் நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு எதிர்பார்ப்புகளை நிறைவேற்றியவாறு வியாபாரம் செய்வதே ஒரு நல்ல முஸ்லிமின் பணியாக இருக்க வேண்டும்.

**ஒரு ஹதீஸில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

நீங்கள் எவருக்காவது கொடுப்பதற்காக நிறுத்தால் தட்டு கீழே தாழும் வரை நிறுத்துக் கொடுங்கள். அதாவது கொஞ்சம் கூடுதலாக சென்று விட்டாலும் பரவாயில்லை என்று கூறினார்கள்.

எனவே இதுதான் வியாபாரத்தில் ஒரு முஸ்லிமிடம் தென்பட வேண்டிய நம்பிக்கை ஆகும். வியாபாரி நம்பிக்கையாளராக இருந்தால் சரியான முறையில் வியாபாரம் செய்யக்கூடியவராக இருந்தால் பிறகு அவரது அந்தஸ்து எவ்வளவு உயர்ந்த அந்தஸ்து என்பது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய இந்த கூற்றிலிருந்து தெரிய வருகிறது. அதாவது எவ்வளவு உயர்வான அந்தஸ்தை அன்னார் கூறியுள்ளார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: உண்மையான மற்றும் நேர்மையான வியாபாரி நபிமார்கள், உண்மையாளர்கள் மற்றும் சஹீதுகளுடன் இருப்பதற்கு உரிமையாளர் ஆவார்.

அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் தன்னைத் தொடர்புபடுத்திக் கூறக் கூடியவர்களுக்கு தனது நேர்மை மற்றும் நீதியின் தரத்தை அல்லாஹ்வின் கட்டளை மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கட்டளைக்கேற்ப ஏற்படுத்திக் கொள்வதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக! நம்மில் ஒவ்வொருவரும் தன்னை ஆராய வேண்டும். அஹ்மதிகளும் பல்வேறு வியாபாரங்களில் ஈடுபட்டுள்ளனர். நாமும் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப நமது வாழ்வை கழிக்கின்றோமா? நாமும் நம்மில் பலவீனமானவர்களின் உரிமையைச் செலுத்துகின்றோமா? நாம் நமது வியாபார்தில் நீதி மற்றும் நேர்மையுடன் செயல்படுகின்றோமா? நாம் நமது சமூகத்தின் அனைத்து வர்க்கத்தினரின் உரிமையைச் செலுத்துகின்றோமா? நாம் நம்மை தீமையிலிருந்து தடுக்கக் கூடியவர்களா? என ஆராய வேண்டும். ரமலான் மாதம் வருகின்ற போது நன்மையின் பக்கம் கவனம் ஏற்படுகின்றது.

எனவே இந்த விசயங்களின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். நம்மில் ஒவ்வொருவரும் அல்லாஹ் தடுத்துள்ள எல்லா விதமான தீமையிலிருந்தும் தவிர்ந்திருக்கக் கூடியவர்களாக ஆவோமாக!

★ ★ ★ ★ ★

JUMUA KHUTBA
HAZRATH KHALIFATUL MASIH V
at BAIT-UL-FUTUH MOSQUE, London
on 02.08.2013

Translated by : Maulavi N. ZIAULHAQ
Typeset by : A. MUHAMMAD NISAR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456